**செய்தி வெளியீடு எண்: 29/2022** **நாள்: 25.04.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயிலில் கடந்த ஆண்டில்**

**29,956 பயணிகள் சுற்றுலா பயண அட்டையை பயன்படுத்தியுள்ளனர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தகவல்**

சென்னை மெட்ரோ இரயில்களில் கோடை விடுமுறை நாட்கள் மட்டும் அல்லாத பிற நாட்களிலும் நாள் முழுவதும் மெட்ரோ இரயிலில் பயணிக்க ரூ.150-க்கான சுற்றுலா பயண அட்டையை பயன்படுத்தி கொள்ளலாம் என்றும், இந்த பயண அட்டையை கடந்த ஆண்டில் 29 ஆயிரத்து 956 பயணிகள் பயன்படுத்தியுள்ளதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சென்னையில் பல்வேறு இடங்களுக்கு செல்ல விரும்புவோர் சென்னை மெட்ரோ இரயிலின் சுற்றுலா பயண அட்டையை பயன்படுத்தி நாள் முழுவதும் சென்னையை சுற்றி பார்க்கலாம். இதற்காக நிர்வாகம் ரூ.150 (ரூ.50 வைப்புத் தொகை) சுற்றுலா பயண அட்டையை அறிமுகம் செய்து தற்போது நடைமுறையில் உள்ளது.

மெட்ரோ இரயிலின் ரூ.150-க்கான சுற்றுலா பயண அட்டை பெறுவோர் தங்களது பயணத்தை காலை முதல் இரவு வரை எத்தனை முறை வேண்டுமென்றாலும் பயன்படுத்தி கொள்ளலாம். இந்த அட்டையை பயன்படுத்திய பின்னர் ரூ.150-ல் உள்ள ரூ.50-க்கான வைப்புத் தொகையை பயண சீட்டு பெறும் இடத்தில் பயண அட்டையை கொடுத்துவிட்டு பெற்றுக் கொள்ளலாம். வைப்புத் தொகையான ரூ.50-யை பயணித்த அதே நாளில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேபோல் பயணிகள் மாதாந்திர சுற்றுலா பயண அட்டையை ரூ.2550 (ரூ.50 வைப்புத் தொகை) பெற்றுக் கொண்டு ஒரு மாதம் முழுவதும் தங்கள் விருப்பம் போல் பலமுறை பயணம் செய்யலாம். ஒருவர் வைத்திருக்கும் இந்த பயண அட்டையை யாருக்கு வேண்டுமென்றாலும் கொடுக்கலாம். இந்த மாதாந்திர பயண அட்டையை கடந்த ஆண்டில் 207 பயணிகள் பயன்படுத்தி உள்ளனர்.

இந்த பயண அட்டை தங்களுடைய திட்டமிட்ட பணிகளுக்கும் துரித சேவைகளுக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்கும். மேலும், இந்த அட்டை மூலம் வழித்தடம் 1-ல் விமான நிலைய மெட்ரோ முதல் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையம் இடையிலான 24 இடங்களுக்கு சென்று வரலாம் மற்றும் வழித்தடம் 2-ல் பரங்கிமலை மெட்ரோ மற்றும் புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ வரையிலான 15 இடங்களுக்கும் சென்று வரலாம்.

இந்த அறிய வாய்பினை உள்ளூர் மக்கள் மட்டுமல்லாது வெளியூர் பயணிகள் மற்றும் கோடை கால இன்ப சுற்றுலா பயணிகளும் பயன்படுத்தி கொள்ளலாம்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**